# G.C.E. ORDINARY LEVEL
## க.பொ.த சாதாரண தரம்

STUDENT SEMINAR SERIES

மாணவர் செயலமர்வு

## HISTORY
## வரலாறு

# QUESTION PAPER – I
# வினாத்தாள் - I



Powered by

# கல்வி அமைச்சு
# தகவல் தொடர்பாடல் தொழினுட்பக் கிளை
# வரலாறு பகுதி - I

## க.பொ.த (சா.த) மாதிரி வினாத்தாள்

தரம் : 11 நேரம் : 1 மணித்தியாலம்

கவனிக்க:

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.இவ்வினாத்தாளுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை உரிய வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில்தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

1. மகாவம்சத்தை எழுதிய மகாநாம தேரரின் வசிப்பிடம்
   1. ஆவாஹன பிரிவெனா
   2. பத்மாவதி பிரிவெனா
   3. திக்சந்த செனவியா பிரிவெனா
   4. காரகல பிரிவெனா
2. மகாவம்சம், தீபவம்சம் ஆகிய நூல்களிற்கு அடிப்படையாக அமைந்த நூல்களாகக் கருதப்படகூடியவை
   1. சிஹல அட்டகதா, வினய அட்டகதா
   2. சூழவம்சம், பூஜாவலிய
   3. மயுர சந்தேசிய, திசர சந்தேசிய
   4. போதிவம்சம், தூபவம்சம்
3. இந்தியாவில் தங்கியிருந்த காலத்தில் இலங்கைபற்றியறிந்து இலங்கை பற்றிய குறிப்புகளை எழுதிய தேசாஞ்சாரி
   1. பாகியன் தேரர்
   2. ஹியுங் சாங்
   3. இபின் பதூதா
   4. அரிஸ்ரோட்டில்
4. சித்தாறும்பி புத்தநாயக என்னும் அதிகாரிக்கு வழங்கப்பட்ட வரப்பிரசாதங்கள் பற்றி குறிப்பிடும் சாசனம்.
   1. வல்லிபுரம் பொற்சாசனம்
   2. கல்பொத்த சாசனம்
   3. பனாக்கடுவ செப்பு சாசனம்.
   4. ஹோபிட்டி கம கல்வெட்டு
5. இலங்கையின் மிகப் புராதன கல்வெட்டுக்கள் எழுதப்பட்டுள்ள மொழி
   1. சிங்களம்
   2. தமிழ்
   3. பாளி
   4. பிராமி
6. “பிளைத்தோசின்” எனப்படும் புவியியற் காலகட்டத்தில் முனைப்பாகக் காணப்பட்ட காலநிலைப்பண்பு
   1. அதிகளவு வெப்பம்
   2. அதிவேக காற்று
   3. அதிகளவு மழைவீழ்ச்சி
   4. அதிகளவு நழுவு வீதம்

7. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த தாழ்நில உலர்வலயக்குகைகளுக்கு உதாரணமாக கொள்ளகூடிய இடம்
   1. மினிஹாகல்கந்த
   2. சீகிரிய பொத்தான
   3. பாகியன்கல
   4. பெல்லன்பதி பெலஸ்ஸ
8. சுமார் 12500 வருடங்களுக்கு முன்பே இலங்கையில் வாழ்ந்த மனிதன் தீயின் உபயோகத்தை உணவுத்தயாரிப்பின்போது பயன்படுத்தியிருந்தமை தொடர்பான ஆதாரம் கிடைக்கப்பெற்ற குகை.
   1. பாகியன்கல
   2. சீகிரிய அலிகல குகை
   3. கித்துன்கல பெலிலென குகை
   4. பட்டதொம்ப குகை
9. முன்வரலாற்றுக் காலமானது தொழினுட்ப அடிப்படையிலே நிர்ணயிக்கப்படுகின்றுது..இக்காலகட்டம் கொண்டிருந்த பிராதான தொழினுட்ப மாற்றம்.
   1. நெருப்பின் உபயோகம்
   2. இரும்புலோகத்தின் உபயோகம்
   3. கேத்திரகணித கல்லாயுதங்களை
   4. கல்லறை மயானங்கள்
10. முன்வரலாற்றுக்கால பெண்கள் தம்மை அழகுபடுத்தி கொள்வதில் அதிக ஆர்வம் காட்டியமையை வெளிப்படுத்துவது
    1. அவர்கள் கல்வியறிவில் மேம்படடிருந்தமை.
    2. அக்காலத்தில் நாகரீகம் மேம்பட்டிருந்தமை
    3. வெளிநாடுகளிலிருந்து ஆபரணங்கள் இறக்குமதியானமை
    4. பெண்களின் நிலை சமூகத்தில் உயர்மட்டத்தில் காணப்பட்டமை
11. சுமணவாவிகாம, விஹரவாவிகாம போன்ற கிராமங்கள் எவ்வகையான கிராமங்களாகும்.
    1. விவசாயம் சார்ந்த கிராமங்களாகும்.
    2. குளக்குடியேற்றக் கிராமங்களாகும்.
    3. தொழில் அடிப்படையிலமைந்த கிராமங்களாகும்.
    4. செயற்பாட்டடிப்படையிலமைந்த கிராமங்களாகும்
12. பனாக்கடுவ செப்புசாசனம் நுருபுரம் என அழைக்கும் இன்றைய நகரம்
    1. அநுராதபுரம் 2. பொலனறுவை 3. கண்டி 4. யாழ்ப்பாணம்
13. அநுராதபுரம் பெரிய புளியன்குளம் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு சுமணவின் குடும்பம் குகையொன்றை சுத்தம் செய்து பிக்குமாருக்கு தானமளித்ததைக் கூறுகின்றது.'' இதன் மூலம் பெறக்கூடிய வரலாற்றுச் செய்தி.
    1. பலரும் இவ்வாறு குகைகளில் வசித்தனர் என்பது
    2. பிக்குகள் உயர்வாக மதிக்கப்பட்டனர் என்பது
    3. இல்லத்தலைவர்கள் சமூகத்தில் முக்கிய இடத்தைப் பெற்றனர் என்பது
    4. அநுராதபுரத்தில் பௌத்த சமயம் வேரூன்றி இருந்ததென்பது
14. ''வெவ்பிரபாதனய'' என பொதுவிலும் உலர்வலயங்களில் ''எல்லங்காவ'' எனவும் அழைக்கப்பட்ட குளத்தொகுதிகள் உருவாக்கப்பட்ட நோக்கம்
    1. கிராமங்களின் எல்லைகளை விஸ்தரித்தல்
    2. கிராம நீர் விநியோகத்தை மேற்கொள்ளல்
    3. கிராமங்களுக்கிடையே ஏறபடும் நீர் தொடர்பான பிரச்சினையைத் தீர்த்தல்
    4. கிராமமக்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கிய நீர் பிரச்சனையை தீர்த்தல்

15. மன்னர்கள் தங்களை “நரேஸ்வர” குபேரக்கடவுள் போன்ற வடிவங்களில் வெளிப்படுத்தியமை எக்கோட்பாட்டை பிரதிபலிக்கின்றது.
    1. மக்கள் மனதில் தம்மை ஆண்டவன் மறறும் போதிசத்துவராக காட்டும் உயர்வு கோட்பாட்டை
    2. மக்கள் மத்தியில் தம்மை அழிக்க முடியாது என்ற எண்ணத்தை உருவாக்க
    3. நாட்டை ஆள்வதை இலகுபடுத்த
    4. தமக்கு இறை ஆசீர்வாதம் உண்டு என்பதை வெளிப்படுத்த

16. யாழ்ப்பாணப் பிரதேசத்தை வசப மன்னன் காலத்தில் ரிஷிகிரி எனப்படும் அரசன் நிர்வகித்தான் எனக் கூறும் சாசனம்.
    1. வல்லிபுரம் பொற்சாசனம்
    2. கல்பொத்த சாசனம்
    3. பனாக்கடுவ செப்புசாசனம்
    4. சங்கமு விகாரை சாசனம்.

17. வசப மன்னனை 16 பெரிய குளங்களை அமைக்கத் தூண்டிய நிகழ்வு
    1. இலம்பகர்ண வம்சத்தவர்களின் பெருமையை நிலைநாட்ட
    2. இந்தியாவின் கிருஸ்ணா நதிக்கரைகளில் ஏற்பட்ட பஞ்சம்.
    3. அதிக குளங்களை அமைத்து மக்கள்மனதில் இடம்பிடிக்க.
    4. நெல் உற்பத்தியில் தன்னிறைவடைய

18. கி.பி 9ம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகளில் “சபாவ” என குறிக்கப்படுவது
    1. அரசபை
    2. வைத்தியசாலை
    3. நீதிமன்றம்
    4. பிக்குகளின் சங்கம்

19. வரலாற்று மூலாதாரங்களில் “உபசக்க ரோகநாச”, “பஸவந்த நாமசாலை” போன்ற பெயர்கள் பயன்படுத்தப்பட்ட துறை
    1. கல்வித் துறை
    2. வைத்திய துறை
    3. விவசாய துறை
    4. நீர்பாசனதுறை

20. கீழ்வரும் வரலாற்று நிகழ்வுகளை கருதுக.

    A- திரிபிடகம் மாத்தளை அலுவிகாரையில் வைத்து நூல் உருவாக்கப்பட்டமை

    B- சரசோதி மாலை எனப்படும் தமிழ் நூல் எழுதப்பட்டமை

    C- செங்கோ இலங்கை மீது படை எடுத்தமை

    D- குசயாதகத்தை அடிப்படையாகக் கொண்டு கவிசிலுமின என்னும் நூல் எழுதப்பட்டமை

    மேற்குறித்த வரலாற்று நிகழ்வுகளை அவை இடம்பெற்ற கால ஒழுங்கில் கொண்டுள்ள சரியான விடை யாது?

    1. ACDB 2. ADCB 3. DACB 4. DBCA

21. முதலாம் விமலதர்மசூரிய மன்னன் தொடர்பான கீழ்வரும் கூற்றுகளுள் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
    1. இவனிடம் பரம்பரையான சட்ட பூர்வ ஆட்சி உரிமை காணப்பட்டது.
    2. ரோமன் கத்தோலிக்க சமயத்தை கைவிட்டு பௌத்த சமயத்தைத் தழுவிக்கொண்டான்.
    3. கண்டி தலதாமாளிகையை அமைப்பித்தான்.
    4. தந்துரே, பலன போர்களில் போர்த்துக்கேயர்களை தோல்வியடையச் செய்தான்

22. யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்த இறுதி அரசன் யார்?

1. புவிராஜசேகரன் 2. சங்கிலியன் 3. பரராஜசேகரன் 4. வரோதய சிங்கையாரியன்

கீழ்வரும் அட்டவணையில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 23ஆம் 24ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

| அரசன் | இடம் | பட்டப்பெயர் |
|---|---|---|
| A 6ம் புவனேகபாகு | D தம்பதெனியா | G சவுளு விஜயபாகு |
| B 2ம் பராக்கிரமபாகு | E குருநாகல் | H கலிகாலசாகித்திய சர்வங்ஞபண்டித |
| C 4ம் விஜயபாகு | F கோட்டை | J சப்புமல்குமாரன் |

23. கோட்டை இராச்சியத்துடன் தொடர்புடைய அரசனையும் அவன் கொண்டிருந்த பட்டப்பெயரையும் குறிப்பிடப்பட்டுள்ள விடை எது?

1. BH 2. AF 3. AJ 4. CG

24. 2ம் பராக்கிரமபாகு ஆட்சி புரிந்த இடத்தையும் அவனது பட்டப்பெயரையும் குறிப்பிடும் விடை எது

1. FG 2. EJ 3. DJ 4. DH

25. அரசனுக்குப் பின் மருமகனுக்கு(சகோதரியின் மகன்)அரசுரிமை சென்ற இராச்சியம் யாது

1. அநுராதபுரம் 2. கம்பளை 3. கண்டி 4. யாழ்ப்பாணம்

26. போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்தை கைப்பற்றியமை தொடர்பில் மிக முக்கிய பங்களிப்பை வழங்கிய செயற்பாடு பின்வருவனவற்றுள் எது

1. 1521 இல் இடம்பெற்ற விஜயபாகு கொலை.
2. கோட்டை மூன்று இராச்சியமாக பிரிக்கப்பட்டமை
3. 7ம் புவனேகபாகு மற்றும் மாயாதுன்ன இடையேயான மோதல்
4. தர்மபாலன் நன்கொடை சாசனம் எழுதியமை.

கீழே A தொடக்கம் E வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 27 ஆம் 28 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A- அமெரிக்கன் மிஷனரி

B- ஸ்ரீ சுமணதிஸ்ஸ தேரர்

C- ஹென்றிஸ்டீல்ஒஸ்கொட்

D- உதயபானு பத்திரிகை

27. இந்து சமய மறுமலர்ச்சி, இஸ்லாம் சமய மறுமலர்ச்சி ஆகியவற்றுடன் தொடர்புடைய தகவல்களை ஒழுங்கு முறையில் உள்ளடக்கிய விடை யாது

1. D,E 2. A,B 3. D,B 4. E,A

28. யாழ்ப்பாணத்தில கல்வி வளர்ச்சி மற்றும் பௌத்தஆங்கில பாடசாலைகள் தொடர்புடைய தகவல்களை ஒழுங்கு முறையில் உள்ளடக்கிய விடை யாது

1. B,C 2. A,C 3. A,B 4. E,D

29. 1818 கண்டி பிரகடனத்தை வெளியிட்டு கண்டி பூரணமாக பிரித்தானிய ஆட்சியின் கீழ் வந்ததை வெளிப்படுத்திய ஆளுநர்

1. பிரட்றிக் நோத்
2. .எட்வேட் பாண்ஸ்
3. றோபேட் பிரவுண்ரிக்
4. வில்லியம் கோல்புறூக்

30. இலங்கையருக்கு நிர்வாக குழுமுறையை அறிமுகம் செய்த அரசியல் சீர்திருத்தம் எது

1. கோல்புறூக் 2. டொனமூர் 3. குறூமக்கலம் 4. சோல்பரி

31. இலங்கையில் காணப்படும் சில அரசியல் கட்சிகள் கீழே தரப்பட்டுள்ளன.

A- ஐக்கிய தேசியக் கட்சி

B- ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

C- சமசமாஜக்கட்சி

D- தமிழரசுக் கட்சி

மேற்குறிப்பிடப்படும் கட்சிகளுள் சுதந்திரம் கிடைப்பதற்கு முன் உருவாக்கப்பட்ட கட்சிகளை குறிப்பிடும் விடை யாது

1. BC 2. AD 3. AB 4. AC

32. சட்டவாக்க கழகம்,அரசுக்கழகம்,பாராளுமன்றம் போன்ற நிறுவனங்கள் கொண்டிருந்த பொதுப் பண்பு

1. இவை பிரித்தானியரால் இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்தமை

2. அதிகளவில் கல்விகற்றோர் இதன் பிரதிநிதிகளாக காணப்பட்டமை

3. இலங்கை மக்களுக்கு நிர்வாக பயிற்சி அளித்தமை

4. நாட்டுக்குத் தேவையான சட்டமியற்றும் அதிகாரத்தைக் கொண்டிருந்தமை

33. மத்திய காலத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி காரணமாக பல்வேறு துறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன.கீழ்வருவனவற்றுள் எத்துறையில் பெரசல்சஸ் முக்கிய இடம் பெற்றார்

1. மருத்துவ விஞ்ஞானம்
2. நாடுகாண் பயணங்கள்
3. ஓவியக்கலை
4. இலக்கியம்

34. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஆசியக்கண்டத்தில் கைத்தொழில் துறையில் முன்னேற்றம் கண்ட ஒரே நாடு

1. சீனா 2. இந்தியா 3. சிங்கப்பூர் 4. ஜப்பான்

35. கைத்தொழில் புரட்சியின் விளைவுகளை இலங்கையும் அனுபவிதத்து அந்த வகையில் இலங்கையில் ஏற்பட்ட முன்னேற்றங்களில் ஒன்று

1. இலங்கையில் பிரித்தானியரால் இரட்டை நிர்வாக முறை அறிமுகம் செய்யப்பட்டமை

2. இலங்கையில் செல்வந்தர்கள் உருவாக பிரித்தானியாவின் கைத்தொழில் புரட்சி உதவியது.

3. பெருந்தெருக்களை அமைக்கும் நிலை ஏற்பட்டது.

4. இலங்கை மாணவர்களுக்கு மிசனறிகள் கல்வி போதித்தமை

**கீழே A,B,C,D ஆகியவற்றினால் தரப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு 36 தொடக்கம் 38 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.**

A- 1 மறுமலர்ச்சி

2 மானியமுறை

B- 1 சரவதேசசங்கம்

2 ஐக்கியநாடுகள் சபை

C- 1 கொன்தாந்தினோபிள் நகரம் வீழ்ச்சியடைந்தமை

2 பேள் துறைமுகம்மீதான தாக்குதல்

36. முதலாவதின் தோல்வி இரண்டாவதைக் கட்டியெழுப்ப உதவிய விடயச்சோடி யாது?

1. A 2. B 3. C 4. D

37. முதலாவதின் தோற்றத்திற்கு இரண்டாவதின் வீழ்ச்சி காரணமாக அமைந்த விடயச்சோடி யாது?

1. A 2. B 3. C 4. D

38. முதலாவதிற்கும் இரண்டாவதிற்கும் இடையில் எதுவித தொடர்பையும் காட்டாத விடயச்சோடி யாது?

1. A 2. B 3. C 4. D

39. "பிரதிநிதித்துவம் இன்றேல் வரியுமில்லை" என்ற கோசத்துடன் முன்னெடுக்கப்பட்ட போராட்டம்

1. ரஷ்ய புரட்சி
2. கைத்தொழில் புரட்சி
3. பிரான்சிய புரட்சி
4. அமெரிக்க சுதந்திர போர்

40. 1ம் உலகப் போரில் அமெரிக்கா பங்கு கொள்ள காரணமாக அமைந்த சம்பவம்

1. பேள் துறைமுக தாக்குதல்
2. பொஸ்டன் தேனீர் விருந்து
3. லூசித்தானியா கப்பல் மீதான தாக்குதல்
4. பெல்ஜியம் மீதான தாக்குதல்

# ඉන්ටනෙට් සෙල්ලං
## දිනක වේදෝ ලෙල්ලන්



නැණවත් අන්තර්ජාල භාවිතය ඔබේ වගකීමකි. ඒ සඳහා හැමවිට
වැඩිහිටි මග පෙන්වීම ලබාගන්න

Dialog

තිරසාරත්ව අංශයේ පණිවිඩයකි

# G.C.E. ORDINARY LEVEL
# க.பொ.த சாதாரண தரம்

**STUDENT SEMINAR SERIES**

**மாணவர் செயலமர்வு**

## HISTORY
## வரலாறு

# QUESTION PAPER – II
# வினாத்தாள் - II



Powered by

# கல்வி அமைச்சு
# தகவல் தொடர்பாடல் தொழினுட்பக் கிளை
# வரலாறு பகுதி - I

## க.பொ.த (சா.த) மாதிரி வினாத்தாள்

தரம் : 11 நேரம் : 1 மணித்தியாலம்

கவனிக்க:

- பகுதி I இன் முதலாம் வினா கட்டாயமானது.
- பகுதி II இலிருந்து மூன்று வினாக்களுக்கும் பகுதி III இல் இரண்டு வினாக்களுக்கும் விடை எழுதுக.
- எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

**01.**

(அ) கீழே (I) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா இடங்களையும் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (II) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

I. 1. மல்வத்து ஓயா 2. கம்மல்துறை 3. கற்பிட்டி 4. அலிகல

5. கதுறுகொட விகாரை 6. மின்னேரியா 7. மினிஹால் கந்த 8. பல்லவங்க

9. மகாநாகுல 10. பேராதனை 11. காசாதோட்டை 12. மல்வானை

II. 1. சுயஸ்கால்வாய் 2. மலேசியா 3. கல்கத்தா 4. கிரேக்கம்

5. அலஸ்தாந்திரியா 6. பாக்கு நீரிணை. *(12+06=18 புள்ளிகள்)*

(ஆ) (1) கீழ்வரும் A,B,C,D ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A) இரட்டை ஆட்சிக்காலத்தில் இலங்கையின் ஆளுனராக பணியாற்றியவர்

B) பர்மா மீது படையெடுத்து இலங்கையின் வர்த்தக உரிமையை பாதுகாத்த பொலனறுவை ஆட்சியாளர்.

C) கண்டியில் புதிய அரச வம்சம் ஒன்றை உருவாக்கிய மன்னன்.

D) முதலாம் உலகமகாயுத்தத்தின் பின் உலக சமாதானத்தை பேண உருவாக்கப்பட்ட அமையம். *(04 புள்ளிகள்)*

*A,B ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(1) “A” இனால் காட்டப்பட்டுள்ள அமைப்பின் பெயர் என்ன?

(2) இது எப்பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்டது?

(3) இதன் பயன்பாடு யாது?

(4) இதன்மூலம் பெறக்கூடிய தகவல் யாது?



A

*(04 புள்ளிகள்)*

i. படத்தில் காட்டப்பட்டுள்ள நபர் யார்?

ii. படத்தில் காட்டப்பட்டுள்ள கருவியின் பெயர் என்ன?

iii. மேற்படிநபர் எச்சிறப்பு பெயரால் அழைக்கப்படுகின்றார்?

iv. இக்கருவிமூலம் இவரால் மேற்கொள்ளப்பட்ட கண்டுபிடிப்பு ஒன்று தருக?



B

*(04 புள்ளிகள்)*

**02**.

1. வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் வாழ்விடங்கள் மூன்று தருக? *(04 புள்ளிகள்)*

2. வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் எலும்புகள் கண்டெடுக்கப்பட்ட இரு இடங்கள் கீழே தரப்படுகின்றது.அவ் எச்சங்கள் வெளிக்காட்டி இருந்த பண்புகள் தருக?

(A) இராவணஎல்ல குகை

(B) குருவிட்ட பட்ட தொம்பலென *(04 புள்ளிகள்)*

3. “முன்வரலாற்றுக் காலம் தொழிநுட்ப அடிப்படையில் முன்னேறிய காலமாகும்.” இக்காலத்தில் சிறப்புப் பெற்று காணப்பட்ட தொழிநுட்பம் இரண்டு தந்து விளக்குக? *(05 புள்ளிகள்)*

4. வரலாற்றுக்கால குடியேற்றத்தின் கட்டமைப்பை மூன்று காரணிகளின் துணையுடன் விளக்குக? *(06 புள்ளிகள்)*

**03.**

(01) கி.பி 9ம் நூற்றாண்டை சார்ந்த கல்வெட்டுகளில் காணப்படும் பின்வரும் சொற்கள் குறிக்கும் விடயங்களை அதே ஒழுங்கில் தருக?

A. ஏகஆஸ்தான

B. வத்ஹிமி

C. சபாவ *(03 புள்ளிகள்)*

(02) பின்வரும் மன்னர்கள் வைத்தியத்துறை தொடர்பில் ஆற்றிய சேவைகள் ஒவ்வொன்று வீதம் தருக.

A - புத்ததாஸ -

B - 5ம் மஹிந்த -

C - 4ம் காசியப்பன் -

D - 1ம் உபதிஸ்ஸன் -

*(04 புள்ளிகள்)*

(03) இந்நாட்டு மன்னர்கள் வெளிநாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகள் அவர்களின் வெளியுறவுக் கொள்கை என்பதினுள் அடங்கும்.இவ்வாறான இரண்டு தொடர்புகளை தந்து உதாரணம் மூலம் விளக்குக. *(05 புள்ளிகள்)*

(04) பண்டைமக்களின் பொருளாதாரத்தில் அடிப்படையாக அமைந்த மூன்று துறைகளைப் பெயரிட்டு தெளிவுற விளக்குக. *(06 புள்ளிகள்)*

**04.**

(01) பண்டை சமூகத்தில் கிடையான கட்டமைப்பில் காணப்பட்ட மூன்று அதிகாரிகளைப் பெயரிடுக. *(03 புள்ளிகள்)*

(02) எமது புராதன அரசர்கள் விதித்த சட்டங்கள் சில கீழே தரப்பட்டுள்ளது.அச்சட்டங்களை இயற்றிய மன்னர்களின் பெயர்கள் அடைப்புக்குறிக்குள் காணப்படுகின்றன.சட்டங்களுக்குப் பொருத்தமான அரசர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A- மிருகங்களை எவரும் கொல்லக்கூடாது.

B- எருமை பசு ஆடு என்பவற்றைக் கொல்வோருக்கு மரணதண்டனை விதித்தல்

C- நீர் நிலைகளில் வாழும் உயிர் இனங்களை கொலை செய்யக்கூடாது.

D- காட்டு மரங்களை வெட்ட வேண்டாம்.

( 3ம் உதயன், ஆமண்ட காமினி, 4ம் மஹிந்தர், நிஸ்ஸங்க மன்னன், இளநாகன் )

*(04 புள்ளிகள்)*

(03) இலங்கையில் பெண்கள் உயர்வாக மதிக்கப்பட்டனர் என்பதை வெளிக்காட்டும் இரண்டு சந்தர்ப்பங்களை முன்வைத்து விளக்குக. *(05 புள்ளிகள்)*

(04) பண்டைய இலங்கையில் வரிச்சட்டத்தின் மூலம் அறவிடப்பட்ட மூன்று வரிகளைத் தந்து விளக்குக? *(06 புள்ளிகள்)*

**05.**

(01) பொலனறுவை இராச்சிய வீழ்ச்சியின் பின் பிரதேச தலைவர்கள் மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு உருவாக்கப்பட்ட பாதுகாப்பு கோட்டைகள் மூன்றைப் பெயரிடுக. *(03 புள்ளிகள்)*

(02) இரண்டாம் நகராக்க இராசதானிகளின் முதல் மன்னர்களின் பெயர்கள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது.அவற்றைப் பொருத்தமான முறையில் தொடர்புபடுத்தி எழுதுக.

A- தம்பதெனியா

B- யாப்பகுவ

C- குருநாகல்

D- கம்பளை

( 6ம் பராக்கிரமபாகு, 2ம் புவனேகபாகு, 3ம் விஜயபாகு, 1ம் புவனேகபாகு, 4ம் புவனேகபாகு )

*(04 புள்ளிகள்)*

(03) பொலனறுவை இராச்சியம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டு தந்து விளக்குக.

*(05 புள்ளிகள்)*

(04) உலர்வலய நாகரிகங்களின் வீழ்ச்சியின் பின்னர் உருவான ஈரவலய இராசதானிகளின் பொருளாதாரம் எவ்வாறு அமைந்தது என்பதை மூன்று காரணிகளின் உதவியுடன் விளக்குக.

*(06 புள்ளிகள்)*

**06.**

(01) இலங்கையைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்த ஐரோப்பிய நாடுகள் மூன்று தருக. *(03 புள்ளிகள்)*

(02) பிரித்தானியர் இலங்கையை கைப்பற்ற விரும்பியமைக்கான காரணங்கள் இரண்டை குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(03) பிரித்தானியர் கி.பி 1803 இல் கண்டி மீது மேற்கொண்ட படையெடுப்பு தோல்வியுற்றமைக்கான காரணம் இரண்டு தந்து விளக்குக. *(05 புள்ளிகள்)*

(04) 1818 ம் ஆண்டு சுதந்திரப்போராட்டத்திற்கான காரணங்கள் மூன்று தந்து விளக்குக.

*(06 புள்ளிகள்)*

**07.**

(01) பிரித்தானியரால் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட யாப்புகள் மூன்றைப் பெயரிடுக.

*(03 புள்ளிகள்)*

(02) கீழே A தொடக்கம் D வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுடனும் தொடர்புடைய விடையை ஒழுங்கு முறையில் எழுதுக.

A- சட்டவாக்க சபை அமைப்புடன் தொடர்புடைய அரசியல் சீர்திருத்தம்.

B- படித்த இலங்கையர் சட்டவாக்க கழகத்திற்கு வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மூலம் தெரிவுசெய்யப்படுவதுடன் தொடர்புடைய சீர்திருத்தம்.

C- அரசுகழகம் அமைப்புடன் தொடர்புடைய சீர்திருத்தம்

D- செனற்சபை அமைப்புடன் தொடர்புடைய சீர்திருத்தம். *(04 புள்ளிகள்)*

(03) டொனமூர் சீர்திருத்தத்தின் பிரதான அம்சங்கள் இரண்டைக் குறிப்பிட்டு தெளிவுற விளக்குக. *(05 புள்ளிகள்)*

(04) கோல்புறூக் ஆணைக்குழு முன்வைத்த பொருளாதார சீர்திருத்தங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக. *(06 புள்ளிகள்)*

பகுதி-III

**08**.

(01) கைத்தொழில் புரட்சி முதலில் ஆரம்பமான மூன்று துறைகளையும் பெயரிடுக.

*(03 புள்ளிகள்)*

(02) பின்வரும் கண்டுபிடிப்புகளுடன் தொடர்புடையோரை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறையில் தருக.

A- பறக்கும் நூனாழி

B- ஜெனி இயந்திரம்

C- மோட்டார் வாகனம்.

D- ஆகாய விமானம்

( ஜோன்கே, ஜேம்ஸ் ஹாகிரீவ்ஸ், டெம்லர் ரைட் சகோதரர்கள், ஹென்றிபேஸ்மர் )

*(04 புள்ளிகள்)*

(03) கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தில் ஆரம்பமாகியமைக்கான காரணங்கள் இரண்டு தந்து விளக்குக. *(05 புள்ளிகள்)*

(04) கைத்தொழில் புரட்சியால் ஏற்பட்ட சமூக அரசியல், பொருளாதார விளைவுகள் ஒவ்வொன்று தந்து விளக்குக. *(06 புள்ளிகள்)*

**09**.

(01) முதலாம் உலக மகாயுத்தத்தில் மத்திய ஐரோப்பிய அணியில் காணப்பட்ட மூன்று நாடுகளைப் பெயரிடுக. *(03 புள்ளிகள்)*

(02) கீழ்வரும் A,B,C,D ஆகியவற்றினால் குறிப்பிடப்படும் விபரங்களுடன் தொடர்புடையவர்களை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

A- சர்ஜிவோவில் கொலை செய்யப்பட்ட ஆஸ்திரியாவின் முடிக்குரிய இளவரசன்.

B- 1ம் உலக மகாயுத்த காலத்தில் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியாக செயற்பட்டவர்.

C- இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு காரணமான ஜேர்மனின் சர்வாதிகாரி

D- இரண்டாம் உலகமகாயுத்தத்தின் இறுதியில் சரணடைந்த ஜப்பானிய பேரரசன்

(ரூஸ்வெல்ட், வூட்டோ வின்ஸன், பேர்டினை, அடோலப் ஹிட்லர், ஹிரோகித்தோ)

*(04 புள்ளிகள்)*

(03) ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நிறுவனங்கள் ஆறில் இரண்டைத் தந்து அவற்றின் பணிகளை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(04) 1ம் உலக மகாயுத்தத்திற்கான காரணங்கள் மூன்று தந்து தெளிவுற விளக்குக.

*(06 புள்ளிகள்)*

# ඉන්ටනෙට් සෙල්ලං

## දිනක වේදෝ ලෙල්ලන්



නැණවත් අන්තර්ජාල භාවිතය ඔබේ වගකීමකි. ඒ සඳහා හැමවිට
වැඩිහිටි මග පෙන්වීම ලබාගන්න

Dialog

තිරසාරත්ව අංශයේ පණිවිඩයකි